# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
**Tele :** 04630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்று திருவுளம்பற்றி நம்மை மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்து கடந்த வருடம் நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்து தம்முடைய நன்மையினால் முடிசூட்டி ஒரு புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கச் செய்தவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

நம்முடைய புறம்பான மனுஷனை அழித்து, உள்ளான மனுஷனை நாளுக்குநாள் புதிதாக்கினவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

நம்முடைய சிருஷ்டி கர்த்தரின் சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளச் செய்தவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

நம்முடைய உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ள செய்தவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

நாம் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நம்முடைய மனதைப் புதிதாக்கி மறுரூபமாக்கியவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது.

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. கர்த்தர் கடந்த வருடம் உன் வாழ்க்கை பயணத்தில் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. ஆமென்.

*ஆதாரம் :- வெளி.21:5, தீத்.3:5, சங்.136:23, சங்.65:11, 2கொரி.4:16, கொலே.3:10, எபே.4:23,24, ரோ.12:2 & சங்.103:1,2.*

*WISH YOU A HAPPY AND PROSPEROUS NEW YEAR 2003*

## நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம் 1தீமோ.1:11.

1. பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய், அவரை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவருக்கும்; தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தை இங்கு எழுதுகிறேன்.

2. நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூறுகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்பு கூறப்பட்டிருந்தாலும், எப்பக்கத்திலேயும் புறம்பே போராட்டங்களின் மத்தியிலும் மற்றும் என்னுடைய ஏழ்மையிலும், தரித்திரத்திலும் பரிபூரண சந்தோஷத்துடன் உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்தது மில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்ற மனதுடன், நிலையற்ற ஐசுவரி யத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் உண்ணவும், உடுக்கவும் எனக்கு உண்டாயிருந்தால் அதுபோதும் என்கிறவனாய் ஜீவிப்பதினால் எனது திராணிக்கும் மிஞ்சி உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன். ஏனென்றால் நான் உங்களுடையதல்ல, உங்களையே தேடுகிறேன். சகலத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காக எழுதுகிறேன். நம்முடைய பிதாவாகிய தேவ னாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

3. தென்னிந்திய திருச்சபையைச் சார்ந்த எனது உறவினர் ஒருவர் வீட்டிற்கு சென்றிருந்த போது, எங்களது உரையாடலின் வேளையில், அவர்கள் சில தினங்களுக்கு முன்பு தங்கள் குடும்பத்தில் அனை வரும் மற்றும் தங்களது ஊர் சபைமக்கள் அனைவருமாக ஒரு வாடகை வேன் அமர்த்தி, சுவிசேஷ ஊழியத்துக்காக சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்றுவந்ததாகவும், முடிவில் சுவையான அசைவ உணவுடன் ஊழியம் மிக்க சிறப்பாக முடிந்தது என பெருமையாகப் பேசினார்கள்.

4. பொதுவாக ஸ்தாபன சபைமக்கள் இவ்வாறாக வருடத்துக்கு ஒரு முறை சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில், தெரிந்துகொண்ட ஒரு கிராமம் / பட்டணம் சென்று, தெருக்களில் பாட்டுக்கள் பாடிக்கொண்டும், கைப்பிரதிகள் விநியோகம் செய்துகொண்டும், ஏதாவது ஓரிரு இடங்களில் பிரசங்கம் செய்து, முடிவில் ஓரிடத்தில் கூடி விசேஷமான அசைவ உணவுடன் அவர்களது சுவிசேஷ ஊழியத்தை முடித்துத் திரும்புவார்கள். இது அவர்களுடைய பாரம்பரிய வழக்கம்.

5. எனது உறவினர் வீட்டில், அவர்கள் சுவிசேஷ ஊழியத்தைப் பற்றி கேட்டபிறகு நான் அவர்களுடன் உரையாட ஆரம்பித்தேன். பிரியமானவர்களே, நீங்கள் குடும்பத்துடன் சுவிசேஷ ஊழியம் செய்து வந்தது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கச் சென்ற உங்கள் வாழ்க்கை முதலில் தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்துக்கு பாத்திரமாக இருக்கிறதா என்று வேதவாக்கியங்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தீர்களா என்று கேட்டேன். அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷம் குறித்து என் வாயிலாக கேட்க வாஞ்சையாயிருந்தார்கள். நாங்கள் அன்றையத் தினம் தியானித்ததை சிந்தையில் கொண்டு **நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம்** என்ற இந்த செய்தித் தொகுப்பை எழுதுகிறேன். இதைக் கொண்டு நீங்களும் உங்களது கிறிஸ்தவ வாழ்க்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரமாக இருக்கிறதா அல்லது இல்லையா என்று உங்களை நீங்களே சோதித்து, நிதானித்துப் பார்க்க உதவியாக இருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

6. நீங்கள் ஒரே ஆவியினாலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத் திற்காக போராடி, எதிர்க்கிறவர்கள் ஒன்றிலும் மருளாதிருக்கும்படி எவ்விதத்திலும் கிறிஸ்துவின் சுவிசே ஷத்திற்கு பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 1:27ல் கூறுவதை ஆதாரமாகக் கொண்டு, கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ன? அதற்கு பாத்திரமாக நமது நடக்கை, கிறிஸ்தவ வாழ்க்கை இருக்கிறதா என எழுதி உணர்த்துவது சுவிசேஷக னாகிய எனக்கு அவசியமாகக் கண்டது.

7. கிறிஸ்துவுக்குள்ளான அன்பிற்கு பாத்திரவான்களே, அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர் களுமாயிருக்கிற தேவனுடைய சபைக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதும் போது: **சகோதரரே, நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன், நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தப்பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள், மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும், உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்கிறான். 1கொரி.15:1-4. இது தான் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி. சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று பொருள்.**

8. இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்தாருக்கு எழுதும் போது, நீங்கள் எவ்விதத்திலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள் என்று கூறும் ஆலோசனை நமக்கும் திருஷ்டாந்தமாக எழுதிவைக்கப்பட்டுள்ளது. நாம், ஐயோ! பலஆயிரம் மக்களைக் கொண்டதான நான் சார்ந்திருந்த சபை தன்னுடைய கவர்ச்சியினால் என்னை மோசம்போக்கி விட்டதே, அல்லது நான் என் முழு நம்பிக்கையையும் வைத்திருந்த என் பாஸ்டர் தன் இனிய சொற்களாலும், தன் உதடுகளின் மதுரவாக்கினாலும் என்னை ஏமாற்றிவிட்டாரே, அல்லது நான் சார்ந்திருந்தவர் இன்டர்நேஷனல் ஊழியக்காரராக இருப்பதால் அவர்தான் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர், அவர் வாக்கு தேவவாக்கு என நம்பி என்னுடைய ஆத்தும இரட்சிப்பை இழந்துவிட்டேனே,

அல்லது எங்களது சபை அப்.2அதி. கூறப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே சபையின் இரண்டாயிரம் ஆண்டு தொடர்ச்சி என்ற நப்பாசையில் ஏமாந்துபோனேனே, அல்லது நான் சார்ந்திருந்த ஊழியக்காரன் பிசாசு களை துரத்தினாரே, தீர்க்கத்தரிசனம் உரைத்தாரே, அநேக அற்புத அடையாளங்களைச் செய்தாரே, அக்கினிஸ்தம்பம் அவருக்கு சாட்சி கொடுக்கிறது எனக் கூறினாரே, ஆதலால் அவர்தான் தேவனுடைய மனுஷன் என்று ஏமாந்து போனேனே, என்று நியாயத்தீர்ப்பின் நாளில் மற்றொருவர் மீது பழிபோட முடியாது. ஆதலால் நாம் திருவசனத்தை சாந்தமாக ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து, தேவனுக்குப் பயந்து நடக்க வேண்டியது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது.

9. இங்கு அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை, தான் பிரசங்கித்த சுவிசே ஷத்தை மறுபடியும் கொரிந்தியருக்கு தெரிவித்து, நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத் திருக்கிறீர்கள் என்று சாட்சிக்கொடுக்கிறான். சாட்சியோடு நின்றுவிடாமல் நீங்கள் நான் பிரசங்கித்த பிரகாரமாய் அதை கைக்கொண்டிருந்தால் மட்டுமே இரட்சிக்கப்படுவீர்கள், மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும் என எச்சரிக்கவும் செய்கிறான். அதாவது பவுல் பிரசங்கித்த பிரகாரம் ஒருவன் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்கு கீழ்படியாவிட்டால், பாத்திரமாயிராவிட்டால், அவனது கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம், இரட்சிப்புக்குரிய விசுவாசம் யாவும் விருதாவாயிருக்கும் என எச்சரிக்கிறான். ஏனென்றால் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. ரோ.1:16.

10. ஏனென்றால் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய அவனுடைய சுவிசேஷம் ரோ.16:26, மனுஷருடைய யோசனையின்படியானதல்ல, அவன் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷ னால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை அவனுக்கு வெளிப்படுத்தினார். கலா.1:11,12. பாருங்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து அவன் எந்த பல்கலைக்கழகத்துக்கோ, கல்லூரிக்கோ சென்று கற்றது கிடையாது. அவனிடம் Dr., B.D., S.T.M., B.Th., M.Div., M.Th. போன்ற பட்டங்கள் எதுவும் கிடையாது. பேராயர், அருட்பெருந்திரு, அருள்திரு, அருட்தந்தை, பங்குதந்தை போன்ற அந்தஸ்துக்கள் எதுவும் கிடையாது. இவைகள் யாவும் மனுஷர்கள் தங்கள் மேன்மைக்காகவும், கௌரவத்துக்காகவும் ஏற்படுத்திக்கொண்ட பட்டங்களும், பதவிகளுமாகும். இந்த பட்டங்களுக்கும், பதவிகளுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு எந்தவிதமான சம்பந்தமுமில்லை. பவுல் வேதபாண்டித்தியம் பெற்றவர்களிடம் சென்று இயேசு கிறிஸ்து வின் சுவிசேஷத்தை பெறவில்லை. மாறாக தனிப்பட்ட முறையில் இயேசு கிறிஸ்துவே அவனுக்கு அதை வெளிப்படுத்தினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பவுல் உண்மையுள்ளவன் என்று எண்ணி, அவனை நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின் ஊழியத்துக்காக ஏற்படுத்தினார். 1தீமோ.1:11,12. ஆதலால் தான் அவன், நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள் என்று கொரிந்தியருக்கு ஆலோசனை கூறினான். 1கொரி.11:1. நாமும் கொரிந்தியரைப் போன்று அவனை பின்பற்றவேண்டியவர்களாயிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவு கூறவும், அவர்களுடைய வசனத்துக்கு கீழ்படியவேண்டியவர்களாகவும் இருக்கிறோம். ஒருவன் கீழ்படியாதிருந்தால், அவன் வெட்கப்படும்படிக்கு அவனோடே கலந்திருக்கவும் கூடாது என்ற கட்டளையும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யூதா.17, 2தெச.5:14.

11. மேலும் பவுல், அவன் பிரசங்கித்த சுவிசேஷத்துக்கு, உபதேசங்களுக்கு விரோதமாய் பிரிவினை களையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று புத்தியும் சொல்லுகிறான். ரோ.16:7. இதோடு மட்டுமல்ல, தான் பிரசங்கித்த தன் சுவிசேஷத்தைவிட்டு வேறொரு சுவிசேஷம் இல்லையெனவும், சிலர் சுவிசேஷத்தை புரட்டுகிறார்கள், ஆதலால் நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாது, நாங்களாவது (பவுல் தன்னைக் குறித்துக் கூறுகிறான்) வானத்திலிருந்து வருகிற வேறொரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்று கூறுகிறான். பவுல் நாளைக்கு வேறொரு சுவிசேஷத்தைக் கொண்டுவந்தால், அவனும் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்று தன் மீதும் தீர்ப்புக் கூறுகிறான். ஏனென்றால் அவனால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம். ஆதலால், பவுல் பிரசங்கித்த பிரகாரமாய் ஒருவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கியாது, அதைப்புரட்டி, வேறொரு சுவிசேஷத்தை பிரசங்கித்தால் 2கொரி.11:4 அவன் சபிக்கப் பட்டவன் என்பது உறுதி. நம் மத்தியில் உள்ள ஸ்தாபன சபைகள்யாவும் வேறொரு சுவிசேஷத் தையே பிரசங்கித்து வருகிறது. ஆதலால் ஸ்தாபன சபைகளுக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்பதை நீங்கள் முதலாவது அறிந்துகொள்ள வேண்டும். சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையின் நின்று, அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் நின்று ஸ்தாபன சபைகளைக் கொண்டு விலகும்படி செய்து உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஆதலால் **சபை ஸ்தாபனங்களைவிட்டு அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதை களில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு என் ஜனங்களே அவளைவிட்டு வெளியே வாருங்கள் என்று உங்களை அழைக்கிறேன்.** வெளி.18:4.

12. ஆதலால் குமாரனுடைய (இயேசு) சுவிசேஷத்தைப் புரட்டி, வேறொரு குமாரனுடைய (பாலாசீர்லாறி - மனுஷகுமாரன், பிரன்காம் - கிறிஸ்து என போதிப்பவர்கள்) சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள், சபிக்கப் பட்டவர்களே. ஆதலால் இப்படிப்பட்டதான் உபதேசங்களிலிருந்து உங்களை விலக்கிக்கொள்ளுங்கள். வேற்றுமையான உபதேசம் உங்களை ஆட்கொள்ள ஒட்டாதிருங்கள்.

13. தென்னிந்திய திருச்சபை, பாப்டிஸ்ட் சபை, பெந்தெகொஸ்தே சபை, மெத்தடிஸ்ட் சபை, கத்தோலிக்க திருச்சபை, லூத்தரன் சபை, அசெம்ளி ஆப் காட் சபை, தேவ சபை, பூரணசுவிசேஷ சபை, மார்த்தோமா சபை, ஏழாம்நாள் திருச்சபை, மாரநாதா சபை போன்ற சபைகள் உங்களை இரட்சிக்கவே இரட்சிக்காது. அவைகளைச் சார்ந்திருப்பதினால் உங்கள் ஆத்துமாவுக்கு எந்தவிதமான லாபமுமில்லை. தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி,

அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். **சிறுபான்மை** என்ற பெயரில் சிறுபான்மையினரில் சிலர் ஐசுவரியவான்களாவதற்கும், இந்த ஐசுவரியவான்களின் ஆதரவால் அவர்கள் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் சுகபோகமாக வாழ்வதற்கும் மட்டுமேயன்றி இந்த ஸ்தாபன சபைகள் மற்றொன்றுக்கும் உதவாது. சாத்தானால் மோசம் போகாதீர்கள். தனிப்பட்ட முறையில் இயேசு கிறிஸ்துவின் மீது உள்ள உங்கள் விசுவாசமே உங்களை இரட்சிக்கும்.

14. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள். அப்.16:31. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். மாற்.16:16. அவரை (கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான். அப்.10:43. அவராலேயன்றி (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. அப்.4:12. நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப் புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்.2:38.

15. பிரியமானவர்களே நீங்கள் எந்த ஸ்தாபன சபையை சார்ந்திருந்தாலும், ஜெபவீடுகளை சார்ந்திருந்தாலும், தனிப்பட்ட ஊழியங்களைச் சார்ந்திருந்தாலும், பவுல் பிரசங்கித்த பிரகாரமாக நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்படியாவிட்டால் நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்பது அதிநிச்சயம். சுயஞானத்தினால் 1கொரி.2:21. இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள் ஒருவனும் இந்த சுவிசேஷத்தை அறியமுடியாது. 1கொரி.2:8. பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தின்படியே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிப்புக்கு அழைத்திருக்கிறார். 2தெச.2:14. ஸ்தாபன சபைகள் ஒவ்வொன்றும் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தின்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிப்புக்கு அழைக்கவில்லை. ஸ்தாபன சபைகள் மகாவேசி (கத்தோலிக்க திருச்சபை)யினுடைய குமாரத்திகள் தானே! இவள் ஆழமான படுகுழி யல்லவா!! இவள் அருமையான உள்ளங்களை வேட்டையாடுகிறவளல்லவா!!! நாமோ, வார்த்தையி னாலாவது, நிருபத்தினாலாவது பவுல் நமக்கு உபதேசித்த முறைமைகளை கைக்கொள்ள வேண்டியவர்க ளாயிருக்கிறோம். 2தெச.2:15. அவ்வாறாக கைக்கொள்ளுகிறவர்களே ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிற தினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். 2தெச.2:13. பவுல் பிரசங்கித்தபிரகாரம் சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினை செலுத்தும்படிக்கு, நித்திய அழிவாகிய தண்டனை உண்டு. 2தெச .1:7,10.

16. பவுல் நமக்கு ஒப்புவித்த கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் என்ன? கிறிஸ்துவானவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்பதாகும். 1கொரி.15:3,4. இந்த சுவிசேஷத்துக்கு பாத்திரமாக நாம் நடந்துகொள்ள வேண்டும். இதில் நடக்கத் தவறியதற்கு சாக்கு போக்குச் சொல்ல இடமில்லை. இந்த சுவிசேஷத்துக்குப் பாத்திரமாக நாம் நடக்க வேண்டுமானால், நாமும் கிறிஸ்துவோடுகூட மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழ வேண்டும். நாம் கிறிஸ்துவோடு கூட உயிர்த்தெழுந்திராவிட்டால் இன்னும் நம்முடைய பாவத்திலேயிருப்போம். 1கொரி.15:17. உயிர்தெழுதலின் பிள்ளைகள் தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கிறார்கள். லூக்.20:26. இவர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். 1பேது.1:4. மறுபிறப்பில் ஆத்துமாவின் தன்மை தேவன். மற்றபடி ஆத்துமா உலகத்தைப் பற்றியது.

17. அப்படியானால் நாம் எப்படி கிறிஸ்துவோடுகூட மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுவது? இது எப்படியெனில், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவருடைய மரணத்துக் குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்படுகிறார்கள். அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். கிறிஸ்துவோடுகூட மரித்த நாம், அவருடனேகூட பிழைத்தும் இருக்கிறோம். ரோ.6:3-5. ஆக தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தினாலே, கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதினாலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறோம். கொலோ.2:12. ஞானஸ்நானத்தில் ஒருவனை தண்ணீரில் மரண நிலையில் மூழ்கி, அதாவது அடக்கம் செய்து, பின்பு அவனை மேலே தூக்கி எடுப்பதால் அவன் தன் பாவங்களுக்கு மரித்து, கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டு, அவருடனே கூட எழுந்திருக்கிறான். இப்பொழுது பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின.

18. முதலாவது ஒருவன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்ற இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்தியவசனத்தைக் கேட்டு விசுவாசிக்க வேண்டும். எபே.1:13. அப்.16:31. விசுவாசத்தின் பலன் ஆத்தும இரட்சிப்பு. 1பேது.1:9. இந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவன் ஞானஸ்நானம் பெறும்போது இரட்சிக்கப்படுகிறான். மாற்.16:16. விசுவாசத்தைத் துவங்குகிறவர் இயேசு. எபி.12:1. கிருபையினாலே நாம் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். இது தேவனுடைய ஈவு. ஆதலால் தான் இது தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது.எபே.2:2-9.ஆக ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால் மட்டும் போதாது, அவன் தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் பெறவேண்டும்.

19. ஆனால் தண்ணீர் ஞானஸ்நானம் ஒருவனை இரட்சிக்காது. இயேசு கிறிஸ்துவின் இரத்தமே சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். இயேசு கிறிஸ்து உங்களுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்பதன் மேல் உள்ள உங்கள் விசுவாசத்தை நீங்கள் தண்ணீரில் பெறும் முழுக்கு ஞானஸ்நானம், (நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை. 1பேது.3:21) மூலம்

தெரிவிக்கிறீர்கள். இது ஒரு சபைஒழுங்கு. தண்ணீர் ஞானஸ்நானம் உங்கள் பாவங்களை மன்னிப்ப தில்லை. அவ்வாறாக மன்னிக்குமானால் இயேசு கிறிஸ்து மரித்தது, இரத்தம் சிந்தினது வீணாகும். தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை காண்பிப்பதற்கான தேவனுடைய நியமம். 1கொரி.15:17. கிறிஸ்துவுடனேகூட மரித்து, அடக்கம்பண்ணப் பட்டு, உயிர்த்தெழாதவன் தேவனுடைய பிள்ளையல்ல. லூக்.20:26. இது குறித்து பவுல் **என் சுவிசேஷத் தின்படியே, இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். நாம் அவரோடே மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்திருப்போம். நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் என்கி றான்.** 2தீமோ.2:8,11,12. கிறிஸ்துவோடுகூட மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு உயிர்த்தெழாதவன் இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பவனே. அவரை மறுதலிப்பவர்கள் அவருடைய குமாரரும், குமாரத்திகளும் அல்ல.

20. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தன் பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த் தெழுந்தார் என்று விசுவாசிக்கிறவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவேண்டும். அப்.10:43. அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே, தன் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும். அப்.26:18. பாருங்கள், இரட்சிப்புக்கென்று கொடுக்கப்பட்ட நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப் படும்படிக்கு, வானத்தில் கீழெங்கும், மனு ஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்.4:12. நாம் வார்த்தையினாலாவது, கிரியையி னாலாவது எதைச்செய் தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே செய்ய வேண்டும். கொலோ.3:17.

21. இக்காரணத்தினால்தான், பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு, **நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெறுவீர்கள் என்றான்.** அப்.2:38. அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் மூவாயிரம் பேர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்.2:41. இவ்வாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தங்கள் பாவமன்னிப்புக் கென்று தண்ணீரில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்களையே கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அப்.2:47. இவர்கள் தான் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு பாத்திரமாக நடந்தவர்கள்.

22. மகாவேசியும், அவளுடைய குமாரத்திகளுமாகிய ஸ்தாபனசபைகள் யாவும் இயேசு, சிஷர்களை நோக்கி: பிதா குமாரன் பரிசுத்தஆவி நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் எனக் கூறினார். மத்.28:19. அதன்படியே நாங்கள் ஞானஸ்நானம் கொடுப்போம். இயேசு பெரியவரா, அப்போஸ் தலர்கள் பெரியவர்களா? நாங்கள் அப்போஸ்தலருக்குக் கீழ்படிவதைவிட இயேசுவுக்கே கீழ்படிவோம் என தாறுமாறாகப் பேசுகிறார்கள். வேசி மார்க்கத்தாரிடம் சத்தியத்தை எதிர்பார்க்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. ஆம், ஸ்தாபன சபைகளிடத்தில் சத்தியத்தை எதிர்பார்க்க முடியவே முடியாது.

23. பிதாவுக்கும் குமாரனுக்கும் நாமம் உண்டு. நீதி.30:4. பரிசுத்த ஆவிக்கும் நாமம் உண்டு. யோ.14:26. சாலொமோனுக்கு ஒரு பிதா உண்டு. அவன் பெயர் தாவீது. 1இரா.5:1,3. பெல்ஷாத்சார் என்னும் ராஜா வுக்கு ஒரு பிதா உண்டு. அவன் பெயர் நேபுகாத்நேச்சார்.தானி.5:11. பாருங்கள் ஒவ்வொரு குமாரனுக்கும் பிதா உண்டு. குமாரனுக்கும் பெயருண்டு. பிதாவுக்கும் பெயருண்டு. பெயரில்லாத பிதாவும் இல்லை, குமாரனுமில்லை. இங்கு இயேசு (குமாரன்) நான் என் பிதாவின் நாமத்திலே (பெயரிலே) வந்திருக்கிறேன் என்கிறார். அப்படியானால் பிதாவின் நாமம் இயேசு என்பதாகும். மேலும் இயேசு, என் நாமத்திலே பரிசுத்தஆவி என்கிறார். யோ.14:26. அப்படியானால் பரிசுத்தஆவியின் நாமமும் (பெயரும்) இயேசு என்பதாகும். பிதாவின் நாமம் இயேசு. குமாரனின் நாமம் இயேசு. பரிசுத்தஆவியின் நாமம் இயேசு. இந்த இயேசு யார்? இவர் கர்த்தராகிய கிறிஸ்து. லூக்.2:11. ஆதலால் தான் இயேசு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என அழைக்கப்பட்டார். பிதா யார்? கர்த்தரே பிதா. ஏசா.63:16,64:8. கர்த்தர் யார்? இயேசு. 2கொரி.4:5. குமாரன் யார்? இயேசு. மத்.1:21. பரிசுத்தஆவி யார்? ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். அவர் கிறிஸ்து. ரோ.8:26,34. 1யோ.2:1. ஆக பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்துக்குரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பிதா, குமாரன் ஒருவர் வகிக்கும் பதவிகளாகும். அது நாமம் (பெயர்) ஆகாது. நான் சுவிசேஷகன். இது நான் வகிக்கும் பதவியின் பெயர். சுவிசேஷகன் என்பது எனது நாமம் ஆகாது. என் நாமம் (பெயர்) காலேப் யோசுவா. அதே போன்றே பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

24. பிதா குமாரன் பரிசுத்தஆவி நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கூறிய இயேசு சிஷர் களிடம் என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்தஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் என்றார். யோ.15:26, 1யோ.2:27.

25. அதன்படி பெந்தெகொஸ்தே நாள் அன்று பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது. இயேசுவின் சிஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அப்.2:4. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்தஆவியினாலே சுவிசே ஷத்தை பிரசங்கித்த (1பேது.1:12.) அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுருவின் வார்த்தையைக் கேட்டு, அதாவது அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்தில் குத்தப்பட்டவர்களிடம் நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான். அப்.2:38. இயேசு: பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கூற, **இயேசு கூறியதை நினைவூட்டிய பரிசுத்தஆவி, அப்போஸ்தலர்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்தி, அப்போஸ் தலர்கள் மனந்திரும்பியவர்களின் பாவமன்னிப்புக்கென்று பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமகாரண ராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார்கள்.** ஸ்தாபன சபைகள்

அந்திக்கிறிஸ்துவின் ஆவியினால் வழிநடத்தப்படுவதால் அவர்கள் உங்களை சத்தியத்துக்குள் வழிநடத்த முடியவே முடியாது. அது நீங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற அனுமதிக்காது. சாத்தான் நீங்கள் பாவமன்னிப்பை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற விடவேமாட்டான்.

26. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் மட்டுமே பாவமன்னிப்பு உண்டு. அப்.14:43, 4:12, 26:18. பாவமன்னிப்பை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெறவிடாதபடி சாத்தான் ஸ்தாபன சபை மக்களின் கண்களை குருடாக்கிப்போட்டான். ஆக அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்க ளுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர் களாகவும் இருக்கும்படியும், அதன்பொருள் (மத்.28:19ன் பொருள்) அவர்களுக்கு மறைவாய் யிருக்கும்படிக்கும் இயேசு, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் எனக் கூறினார். மத்.28:19, 4:12. ஆனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதைத் தேவன் திறக்கிறார். லூக்.24:45. அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்.

27. இப்பொழுது பிரியமானவர்களே, உங்களை நீங்களே சீர்தூக்கி, ஆராய்ந்து, சோதித்துப்பாருங்கள். உங்கள் வாழ்க்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு பாத்திரமாக இருக்கிறதா? இல்லையென்றால் சற்றும் காலதாமதம் செய்யாமல் நீங்கள் மனந்திரும்பி, உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். பரிசுத்தஆவியின் வழிநடத்துதலை நிராகரிக்காதீர்கள். பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாதவனுடைய வாழ்க்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு பாத்திரமான வாழ்க்கையில்லை. அவனுடைய விசுவாசம் விருதா. அவன் இரட்சிக்கப்படவுமில்லை. அவன் பரிசுத்தஆவியை பெறவும் இல்லை. ஆனாலும் அவன் மூலமாக பரிசுத்தஆவி கிரியை செய்யும். அதைக் கண்டு ஏமாந்து போய் விடாதீர்கள். ஏனென்றால் The gifts and callings of God are without repentance. ஆதாவது மனந்திரும்பாத ஒருவனிடம் ஆவியின் வரங்கள் கிரியை செய்யும். அவன் ஒரு நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவன். யூதாஸ் கேட்டின் மகன். அவன் கர்த்தரை காட்டிக் கொடுப்பதற்காகவே முன்குறித்து அழைக்கப்பட்டான். அவன் பரிசுத்தஆவியை பெறவில்லை. ஆனால் பரிசுத்தஆவியின் வரம் அவனிடத்தில் கிரியை செய்தது. அவன் அற்புத அடையாளங்களைச் செய்தான். ரோ.19:29ன் படி ஒருவன் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெறாமலே பரிசுத்தஆவி அவன் மூலமாக கிரியை செய்யும். நீங்கள் எல்லா மார்க்க சம்பந்தமான காரியங்களிலெல்லாம் ஈடுபடலாம். நீங்கள் ஆவியில் நடனமாடி தேவனை ஸ்தோத்தரிக்கலாம். நீங்கள் பாஷைகள் பல பேசலாம். நீங்கள் வியாதிகளை குணமாக்கலாம். அதைக் குறித்து ஒருவரும் தவறென சொல்லமுடியாது. அது உண்மையே. ஆனால் பாருங்கள் இவைகள் பரிசுத்தஆவியின் அபிஷேகம் இல்லாமலேயே கிரியை செய்கிற ஆவியின் வரங்களாய் இருக்கிறது.

28. அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்ல தேவனால் ஏற்படுத்தப்பட்டவன். பிலி.1:17. அவன் பிரசங்கித்த சுவிசேஷம் கிறிஸ்துவினுடைய சுவிசேஷம். ரோ.2:16. இந்த சுவிசேஷம் இந்த செய்தித் தொகுப்பை வாசித்த, தியானித்த பின்பும் ஒருவனுக்கு மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசியாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ் சத்தின் தேவனானவன் அவர்களுடைய கண்களைக் குருடாக்கினான். 2கொரி.4:3,4. இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் ஸ்தாபன சபைகளின், திருத்துவக்கொள்கைகாரர்களின் பிஷப்களும், குருமார்களும், பாஸ்டர்களும், விசுவாசிகளும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை அறியாதபடி அவர்கள் மனதை குரு டாக்கிப் போட்டான். ஆனாலும் அவர்கள் பொய்யாய் கிறிஸ்தவர்கள் என்று பெயர்பெற்றிருக்கிறார் களேயன்றி அவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை ஸ்தாபன சபைகளுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது. ஏனென்றால் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் யாவரும் கிறிஸ்தவர்கள் அல்ல. லீதியாளுடைய இருதயத்தை திறந்த தேவன் இவர்களுடைய இருதயத்தையும் திறக்க வேண்டும். இந்த சுவிசேஷத்தை வாசித்தபிறகும் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாது உங்கள் மனஇஷ்டப்படி நடந்து நான் சரியான வழியிலே செல்லுகிறேன் என்று உங்கள் உள்ளத்தை நீங்கள் தேற்றிக்கொண்டால் நிச்சயமாக கர்த்தர் உங்களை மன்னிக்க சித்தமாயிறார்.

29. உங்கள் மத்தியில் இன்று பிரபலமாயிருக்கிற அநேக ஊழியர்கள் நித்தியானந்த தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை அறிந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் அதை அறிக்கை பண்ணுவதில்லை. ஏனென்றால் அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புகிறார்கள். இவர்களைக் குறித்து லவோதிக்கேயா சபை தூதனும் தீர்க்கத்தரிசியுமாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் **ஏசாவைப்போல், இவ்வுலகின் ஒரு பானை கூழுக்காக அவர்கள் தங்கள் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப் போடுகிறார்கள். ஆக்கினையின் குழியில் விழுந்து ஆக்கினைக்குள்ளாவார்கள். இவர்கள் சுவிசேஷத்தின் வேசிகள் என்று குற்றஞ்சாட்டுகிறார்.** செய்தி: குற்றச்சாட்டு பக்கம்.77.

30. முடிவில், எனது தென்னிந்திய திருச்சபையைச் சார்ந்த உறவினரது சுவிசேஷ ஊழியம் ஒரு உல்லாச பயணம்தான் எனக் கூறி அந்த பயணம் முடிவில் அசைவ உணவுடன் மிக்க திருப்தியாக முடிந்ததற்காக மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது, முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்படியாதவர்களின் முடிவு என்னவாயிருக்கும் என்ற கேள்வியை அவர்கள் சிந்தையில் வைத்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினை உண்டு எனக் கூறி விடைபெற்றுச் சென்றேன்.

31. நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டு, எழுதியுள்ள இரட்சிப்புக்கேதுவான வார்த்தைகளை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு சமாதானத்தின் சுவிசேஷத்தை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளுகிற வர்களாகிய உங்களுக்கு இந்த ஆண்டு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வா தத்தைக் கொண்டு வருவதாக. நான் என் தாயின் வயிற்றில் ஏழாவது குழந்தையாக உருவானது முதல் என்னைப் பரித்தெடுத்து தம்முடைய கிருபையினால் அழைத்த ஜீவனுள்ள மெய்யான தேவனிடத்தில் நான் பெற்ற ஊழியத்தை கடந்த வருடத்தைப் போல் இந்த வருடத்திலும் நிறைவேற்றும்படி கவனமா யிருக்க உங்கள் ஜெபங்களில் என்னை நினைத்துக்கொள்ளுங்கள்.

**இந்த வனாந்திர யாத்திரையில் எங்கள் பாடுகளுக்காகவும், பிரயாசங்களுக்காகவும் உங்கள் ஜெபங்கள் தேவை**

சகோ. காலேப் யோசுவா சகோதரி. எப்சிபா கமலம்
மகன்கள்: 1. ஜாண்பால் B.E., M.D.C.A., D.E.C., 2. இம்மானுவேல் ஒண்டர்புல் B.Sc
மகள்கள்: 1. இவாஞ்ஜலின் தெபொராள் B.H.M.S. 2. லவ்லின் எஸ்தர் B.P.T.
3. காட்ஸ்வில் ஷலோமி 6th Std.

அ. மூத்தமகனுடைய சரீர பெலவீனத்திலே கர்த்தருடைய பலம் பூரணமாய் விளங்கவும், வேலைவாய்ப்புக் காகவும் ; இரண்டாவது மகனுடைய வேலைவாய்ப்பு மற்றும் மேற்படிப்புக்காகவும் ; இதர மூன்று பெண் மக்கள் தங்கள் படிப்புகளை ஏற்றவேளையில் வெற்றிகரமாக முடிக்கவும் உங்கள் ஜெபங்களில் இவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.
ஆ. நான் என் தகுதிக்கும் மிஞ்சி பிள்ளைகளைப் படிக்கவைக்கிறேன் என்று குறை கூறுகிறவர்கள் உண்டு. கர்த்தர் மனுஷர்கள் கண்களில் தயவுகிடைக்க அநுக்கிரகம் செய்கிறார். ஆதலால் எனது பிள்ளைகள் படிக்கிறார்கள். இது கர்த்தர் கொடுக்கும் ஈவு என நம்புகிறேன். எனது பிள்ளைகள் படிப்பு காரியத்தில் திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம், ராஜா கல்வி நிலையங்களின் ஸ்தாபகர் டாக்டர்.எஸ்.ஏ.ராஜா அவர்கள் மற்றும் குமரிமாவட்டம், ஆத்தூர், ஒயிட் ஞாபகார்த்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியின் ஸ்தாபகர் டாக்டர்.எம்.ராஜேந்திரன் அவர்கள் கண்களில் கர்த்தருடைய கிருபையினால் தயவு கிடைத்ததினாலும், மேலும் சில தேவனுடைய பிள்ளைகள் மூலம் உதவிகளும், ஒத்தாசைகளும் கிடைத்ததால் பிள்ளைகள் தங்கள் கல்விகளைக் கற்று வருகிறார்கள். கற்று முடித்து வேலை வாய்ப்புக்காக முயற்சி செய்து வருகிறார்கள். இதிலும் சில தேவதாசர்கள் அவர்கள் வேலை வாய்ப்புக்காக முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இவ்வாறாக பிள்ளைகள் படிப்பு மற்றும் வேலை வாய்ப்புகளில் உதவி செய்து வரும் கர்த்தருடைய பிள்ளைகளுக்காகவும், பிள்ளைகள் வேலை வாய்ப்பின் மூலம் சில குடும்பக் கடன்பாரங்கள் தீரவும் பரலோகத்திலிருக்கிற தேவனுக்கு உங்கள் விண்ணப்பங்களை ஏறெடுத்து எங்களுக்கு உதவுங்கள்.
இ. பிள்ளைகளின் மேற்படிப்புக்காக பெற்ற வங்கிக் கடன் கட்டப்படாத நிலையில் இருப்பதால், அதை கூடிய சீக்கிரத்தில் கட்டிமுடிக்க வேண்டுதல் செய்யுங்கள்.
ஈ. கடந்த 1984ம் ஆண்டு ஒரு சிறுதொழில் வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் பண உதவியுடன் தொடங்க, ஓரிரு ஆண்டிலே வங்கிக்கும் எனக்கும் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் பிரச்ச னைகளில் பரிகாரங்களுக்காக நீதிமன்றம் செல்லவும், கீழ்நீதிமன்றங்களில் நியாயமான தீர்ப்பு கிடைக் காததால், உயர்நீதிமன்றம் அணுகி நீதிபெறவும், ஆனாலும் இந்த பிரச்சனைகள் இன்னும் முடிவுக்கு வராததால் மீண்டும் உயர்நீதிமன்றம் செல்லவேண்டிய நிலையில் இருப்பதால் இந்த நெருக்கத்திலிருந்து விடுபட மன்றாடுங்கள். தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தினுடன் எந்தவிதமான பிரச்சனையும் இல்லாததால் அவர்கள் கடன் ஏற்ற வேளையில் செலுத்தி முடிக்கப்பட்டது.
உ. மேலும் சிறுதொழில் நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டு வந்ததால் அதை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. கர்த்தருக்குச் சித்தமானால் இந்த ஆண்டு முதல் ஊழியத்தில் முழு கவனம் செலுத்த ஜெபியுங்கள்.
ஊ. தமிழ்நாடு மின்சாரவாரியம் மற்றும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை அதிகாரிகளில் சிலர் எனக்கு பல உபத்திரவங்கள் செய்ததுண்டு. இதனால் நீதிமன்ற வழக்குகளும் உண்டு. இவைகளும் சீக்கிரம் முடிவு பெற்று, நியாயமான தீர்ப்பு நீதிமன்றங்களில் கிடைக்கவும், எனக்கு வரவேண்டிய பணங்கள் வந்துசேரவும் வேண்டுதல் செய்யுங்கள்.
எ. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நான் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும் என்னை தேவஊழியக்காரனாக விளங்கப்பண்ண ஜெபியுங்கள்.
ஏ. எனக்கு இந்தச் செய்தித் தொகுப்புகள் வெளியிடுவதில் கம்ப்யூட்டர் டைப்பிங் நல்லமுறையில் செய்து கொடுத்து தன்னுடைய முழு ஒத்துழைப்பைக் கொடுத்து வருபவர் ஒரு முதுநிலை பட்டதாரி மாணவி. இவருடைய ஆத்தும இரட்சிப்புக்காகவும், கல்வியை ஏற்ற வேளையில் வெற்றிகரமாக முடிக்கவும் ஜெபிக்க மறவாதீர்கள்.
ஐ. நான் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டாலும் ஒடிந்துபோவதில்லை, கலக்கமடைந்தாலும் மனமுறிவடை வதில்லை. ஏனென்றால் கர்த்தருடைய கண்கள் என் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் என் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. இந்த வனாந்திர யாத்திரையில் பாடுகள் பெருகுகிறது போல, ஆறுதலும் பெருகுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபமே ஜெயம்! அல்லேலூயா!!

பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.

ஜனவரி, 2003

கிறிஸ்துவின் அன்பில்
***சகோ. காலேப் யோசுவா***